**சிறுகதை: ஒரு விசாரணை**

**படைப்பாளர்: தி. ஜானகிராமன்**

**தலைப்பு: ஒரு விசாரணை - ஒரு மதிப்பீடு**

# Title: Oru Visaranai- An Evaluation

**Dr Uma Allaghery**

**"TAM 2001 Y (3) : Session 3.3 Oru Visaranai- An Evaluation" by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under [CC BY 4.0]**

..................................................................................................................

- பொதுவாக விசாரணை காவல் நிலையத்தினர் நடத்துவது உண்டு. நீதி மன்றம் இந்த விசாரணைக்குத் தீர்ப்பு தருவது உண்டு.
- தி. ஜானகிராமன் படைத்துள்ள ஒரு விசாரணை என்னும் சிறுகதையின் அமைப்பு தனிப்பட்டது.
- இது ஒரு நாடகப் பாணியில் அமைந்துள்ளதாகத் தெரிகிறது.
- நீதி மன்றத்தில் நிகழ்கின்ற விசாரணையைப் போல் அமைந்துள்ளது இச்சிறுகதை.
- குடும்பத்தினர் அளவில் சிறுகதை இயங்குகிறது.
- தங்கள் வீட்டுப் பெண்ணான லீலா ஒருவனைக் காதலிக்கிறாள்; இதற்குக் குடும்பத்தினரும் அவளுடைய முதலாளியும் மறுப்பு காட்டுகிறார்கள்.
- லீலா காதல் உயர்ந்தது என்றும் காதலித்தவனைக் கைவிட முடியாது என்றும் கூறித் தன் குடும்பத்தினரை எதிர்த்து உறுதியான முடிவுடன் நிற்கிறாள்.
- சாதி வேறுபாட்டினை ஒழிக்க வேண்டும் என்றும், எளிமை வாழ்க்கை போதும் என்றும் ஏழ்மைச் சூழல் இருந்தும் அதைச் சமாளித்துக்கொள்ளலாம் என்றும் லீலாவுடைய கருத்து ஆகும்.

- லீலாவுடைய காதலிக்கும் சூழல், திருமணம் ஆன பிறகு ஏற்படப்போகும் வருமானச் சிக்கல்கள் உண்மைதான்; நடிப்பில் பாவனை செய்வது போல் இல்லை என்று நாடகக்குழுவின் முதலாளி அவளுக்கு அறிவுரை கூறி அவளுடைய மனத்தை மாறச் செய்கிறான்; ஆனால், லீலா எல்லாமே தெரிந்துகொண்டுதான், காதலித்தவனோடு குடும்ப வாழ்க்கை மேற்கொள்வாள் என்ற முடிவுக்கு வந்துள்ளாள். காதலித்தவனோடு பதிவுத் திருமணமும் முடிந்துவிட்டது.
- பெண்ணைக் கைக்குள் மடக்கிக்கொள்ள வேண்டும் என்று ஆண்கள் நினைக்கிறார்கள். ஆணும் பெண்ணும் சரிநிகர் என்று பாரதியார் விழைந்துள்ளார். அவ்வகையில் தி. ஜானகிராமன் லீலா என்ற பெண் பாத்திரத்தைப் படைத்துள்ளார். பெண் விடுதலை, பெண் நீதி, பெண் கல்வி, பெண் முன்னேற்றம், பெண் உரிமை எனப் படம் பிடித்துக்காட்டுகிறார் சிறுகதை எழுத்தாளரான தி. ஜானகிராமன்.
- சமுதாயத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும். லீலா தன் அண்ணன்மார்களையும் முதலாளியையும் மதிக்கிறாள். ஆனால், அவளுடைய வாழ்க்கைக்கான முடிவு அவர்களால் எடுக்க உரிமையில்லை என்று ஒரு விசாரணை என்னும் சிறுகதை புலப்படுத்துகிறது. பெண் தன் உரிமைக்காகப் போராட வேண்டும்; மன உறுதியுடன் இருக்க வேண்டும் என்று இக்கதை மூலம் அறியப்படுகிறது.
- இக்கதையில் அதிக உரையாடல்கள் இடம்பெறுகின்றன. இவற்றின் மூலம் கதையின் கருத்து அறியப்படுகிறது. நாடகத்தில் மாந்தர்களின் கருத்து பரிமாற்றம் உரையாடல்களின் மூலம் அமைந்துள்ளது. கருத்து ஓட்டம் இருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே கதை ஒரு சிக்கலோடு தொடங்குகிறது. இக்கதையில் கருத்து வாதம் விவாதம்

நிகழ்கிறது. ஆனால், கடைசியில் இக்கதை ஒரு நல்ல முடிவோடு முடிகிறது. லீலா வீட்டை விட்டுக் கணவனோடு வாழப் போகிறாள் என்ற முடிவு. இத்தீர்மானத்தை யாராலும் தடுக்க முடியவில்லை. அவளுடைய தாயும் அவளுக்கு ஆதரவு அளிக்கிறார் எனக் கதையின் முடிவில் தெரிகிறது.